கோடியிலேதான் இருக்கிறது. இதை சேலத்தில் ஆரம்பிக்க முடியாதா என்று கேட்க விரும்புகிறேன். சேலத்தின் மத்திய பாகத்தில் எங்கே யாவது அதை ஏற்படுத்தக்கூடாதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினரின் தொகுதிக்கு விசேஷ சலுகை வேண்டுமென்றால் அதற்காக வேண்டிய மனுக்கள் செய்துகொள்ளலாம். ஆனால் தொழிற்சாலை நிறுவுவது என்பது எந்த இடத்தில் அதை வைத்தால் லாபகரமாயிருக்கும் வெற்றிகரமாக நடக்கும் என்பதை ஒட்டித்தான் தொழிற்சாலை அமைக்கப்படும்.

SRI A. GOVINDASWAMY : இந்தத் தொழிற்சாலை நிறுவுவதற்கு ரஷ்ய சர்க்கார் பெரிய நிதி தருவதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. அது உண்மையா ? அரசாங்கத்திற்கு இதுபற்றி ஏதாவது தகவல் கிடைத் திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எனக்குத் தெரியாது.

SRI M.P. SUBRAMANIAM : இந்த பாக்ஸைட் டால்மியா என்ற முதலா ளியின் கையில் இருக்கிறது. நாள் ஒன்றுக்கு 100 தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டு அங்கிருக்கிற "பாக்ஸைட் ஓர்" வெளியே அனுப்பப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா ?

11-20 a.m. THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி தனி கேள்வி கேட்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

Municipal divisions in the City

*31 *Q.*—SRI S. PAKKIRISAMY PILLAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have received any proposal from the Corporation of Madras for increasing the number of the existing municipal divisions by subdividing them ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Yes, Sir.

SRI S. PAKKIRISAMY PILLAI : அடுத்த வருஷம் கார்பொரேஷன் தேர்தல் வருவதற்கு முன்னால் முனிஸிபல் டிவிஷன்கள் பிரிக்கப்பட்டு விடுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : முனிஸிபல் டிவிஷன்களைப் பிரிப்பதற்கு ஆலோசனை நடந்துகொண்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : போன தேர்தலுக்கு முன்னதாகவே இது பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது கார்ப்பொரேஷனிலிருந்து. ஆனால் அப்போது இருந்த அமைச்சர் கார்ப்பொரேஷன் தேர்தலுக்குப் பிறகு ஆலோசிக்கலாம் என்று சொல்லிவிட்டார். இப்போது வரும்போதுகூட இந்தத் தேர்தல் நடந்த பின்னர் யோசிக்கலாம் என்று சொல்லிக்கொண்டே வந்தால் இதற்கு முடிவே இல்லை. இறுதியாக ஒரு தேதி சொல்லி அதற்குள்ளே அதைச் செய்துவிடலாம் என்று சொல்லுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கழிந்த சட்டசபையில் அப்போது இருந்த அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லியிருப்பார்கள் என்றால் அது நடக்க முடியாமல் போய்விட்டது. ஆனால், இதை எப்படியாவது இப்போது நடத்த முற்பட்டு அதற்கு வேண்டிய வேலைகளைச் செய்துகொண்டுவருகிறோம்.

SRI K. VINAYAKAM : இப்போது டிவிஷன்கள் பிரிக்கப்படவேண்டும் என்று சொல்வதற்கு அடிப்படை ஒன்றுதான். ஒரு டிவிஷன் சின்னதாக இருக்கிறது. ஒரு டிவிஷன் 8 அல்லது 9 "ஸ்க்வொயர் மைல்கள்" உள்ளதாக இருக்கிறது. ஒரு டிவிஷனில் பத்தாயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள் ; இன்னொரு டிவிஷனில் 40 ஆயிரம் வாக்காளர்கள்

29th June 1957]

இருக்கிறார்கள். இப்படிப்பட்ட "டிஸ்ப்ரொபோர்ஷனேட் ஸிஸ்டம்" இருப்பதனாலேயே, இதை "ரேஷனல் பேஸிஸில்" பிரிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆகவே தயவுசெய்து இந்தத் தேர்தலுக்கு முன்னதாகவே பரிசீலித்து அதை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

Mr. SPEAKER : அதைச் செய்து கொண்டிருப்பதாகத்தான் சொன்னார்களே ?

Sri K. RAMACHANDRAN : தற்போது சென்னையில் எத்தனை டிவிஷன்கள் இருக்கின்றன ? அதை எத்தனையாக அதிகப்படுத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ? எந்த அடிப்படையில் அதை அதிகப்படுத்துவதாக உத்தேசம் ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : சென்னையில் தற்போது 50 டிவிஷன்கள் இருக்கின்றன. அவற்றை, கழிந்த தடவை 60 ஆக்கவேண்டுமென்றும், 10 டிவிஷன்களை "பைபர்கேட்" செய்து 60 ஆக்கவேண்டுமென்றும் நினைத்தது. அப்படிச்செய்தால் இன்னும் வேறு சில கஷ்டங்கள் ஏற்படும். ஏனென்றால் இந்தப் பத்து டிவிஷன்களை மட்டும் பிரித்தால் வேறு சில பெரிய தொகுதிகளும் இருக்கின்றன. தற்போது இதை நன்றாகப் பரிசீலனை செய்து சரியான முடிவாக இருக்க வேண்டுமென்பதில்தான் இவ்வளவு காலதாமதம் ஏற்படுகிறது.

Sri T. P. ELUMALAI : சென்னையை ஒட்டி இருக்கிற பாகங்களை கார்ப்பொரெஷனோடு சேர்த்துகொள்ள உத்தேசமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : இதற்கு நீங்கள் தனிக் கேள்வி கேளுங்கள். இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

Minister's tour of European Countries in 1956

* 32 *Q*.—Sri N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any Hon. Minister went on tour to any European Countries in the official capacity during 1956; and

(*b*) if so, the purpose and details thereof and the amount spent therefor?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes. At the instance of Government of India, Sri M. Bhaktavatsalam, then Minister for Agriculture, visited Geneva on official business in June 1956.

(*b*) The Minister visited Geneva as leader of the Indian Delegation to the 39th Session of the International Labour Conference held at Geneva from 6th to 28th June 1956.

An expenditure of Rs. 6,843·62 was incurred in connection with the above tour and this expenditure was met by the Government of India.

Sri N. K. PALANISAMY : May I know whether any report has been submitted to Government and in what way this State has been benefited by his tour?

The Hon. Sri C. SUBRAMANIAM : A report has been submitted to the Government of India. Any further questions on the subject may be put in the Lok Sabha.